1982 மார்ச் 24]

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டா ரக நூல் என்பது எந்தெந்த நம்பர் நூல்களுக்கு ஒதுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமுகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 20 எஸ், 2/17 எஸ், 40 ஆம் நெம்பர்.

1981 ஆம் ஆண்டு நடைபெற்ற மேல்நிலைப் பள்ளித் தேர்வின் முடிவுகள்.

*வினா எண் 631—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் நடைபெற்ற மேல்நிலைப் பள்ளி அரசு தேர்வில் சுமார் 2,000 மாணவர்களுக்கு இன்னும் முடிவுகள் அறிவிக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடந்த மேல்நிலைத் தேர்வு எழுதிய மாணவர்களில், ஒன்பது பேருக்கு மட்டுமே இன்னும் முடிவுகள் அறிவிக்கப்படாமல் உள்ளன.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்படாத முடிவுகள் இன்னும் 9 பேர்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அந்த மாணவர்களுக்கு குறிப்பிட்ட கால கட்டத்தில் அறிவிக்கப்படாதது ஏன் என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அறிவிக்கப்படாததற்குக் காரணம், தேர்வுத் துறையிலே இருக்கின்றவர்கள் சரியாக வேலை செய்யாததன் காரணமாக அறிவிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைக்கக்கூடும். ஆனால் அப்படியல்ல. அந்தக் காரணங்களை நான் இங்கே சொல்ல வேண்டும்:

(1) 43 மாணவ மாணவியர் தேர்வு எழுதுவதில் ஒழுங்கீனச் செயல் புரிந்ததாக சம்பந்தப்பட்ட தலைமைக் கண்காணிப்பாளர்கள் கொடுத்த புகாரின்மேல் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனால் அவர்களின் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

(2) 56 மாணவர்கள் தாங்கள் மேல்நிலைத் தேர்வுக்கு இதற்கு முன்பு வந்திருந்தார்கள் என்பதற்கும், ஏப்ரல் 1981 தேர்வுக்கு வர தகுதியுள்ளவர்கள் என நிர்ணயிக்க பழைய மதிப்பெண் சான்றிதழ் அனுப்பாததால் அவர்களின் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

(3) 35 மாணவர்கள் அரசு ஆணையை மீறி தேர்ச்சியடைந்த பாடங்களுக்கு மறுபடியும் வருகை தர விண்ணப்பம் அனுப்பியதால் அம்மாணவர்களிடமிருந்து விளக்கம் கேட்டு அவர்களின் விளக்கம் வராமையால் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

அதற்குக் காரணம், பி.யு.சி. தேர்வில் சென்னை போன்ற நகரங்களிலே இருக்கின்றவர்கள் 50 மார்க்கு வாங்கி பாஸ் செய்து விட்டாலுங்கூட, மறுபடியும் இரண்டாவது முறை எழுதி 80, 90 மார்க்குகள் வாங்கி பி.ஈ. அல்லது எம்.பீ.பீ.எஸ். க்கு மனு போட்டு, அந்த மார்க்கின் அடிப்படையிலே, முதல் தடவையாக பாஸ் செய்தவர்களைவிட, இவர்கள் முன்னுரிமை பெறும் தப்பான பழக்கம் இருந்துக் கொண்டு வந்தது.

[முற்பகல் 9-10]

நாம் அதை ஹையர் செகண்டரியிலே எடுத்துவிட்டோம். ஆனால் அதையும் மீறி டிபார்ட்மெண்டிற்குத் தெரியாமலே எழுதியிருக்கிறார்கள்.

(4) மேல்நிலைப்பள்ளிகளில் பயிலாமல் நேரடியாக மேல் நிலைத் தேர்விற்கு விண்ணப்பம் செய்திருந்தனர்.

(5) 242 மாணவர்களுக்குத் தேர்வு மையத்திலிருந்தும் பள்ளிகளிலிருந்தும் தேர்வுக்குரிய சில தகவல்கள் வரவில்லை. சில தகவல்கள் வரவில்லையென்றால் கம்ப்யூட்டரிலே சரியாக ரிசல்ட் போடமுடியாது.

(6) 6 மாணவர்கள் நேரிடையாகத் தனித் தேர்வுகளாக மனுச் செய்துகொண்டபோது அவர்கள் படித்த மற்ற மாநிலப் பள்ளிகளின் சான்றிதழ்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்கள் அனுப்பவில்லை. இங்கே இருக்கின்ற எஸ் எஸ் எல்.சி.-க்கு அவர்கள் படித்த எஸ்.எஸ்.எல்.சி. ஈக்குவல் என்று சர்டிபிகேட் தர வேண்டும். அதுதரவில்லை.

(7) 2 மாணவர்கள் தேர்வுக்கு மனு அனுப்பாமல் தேர்வு மையத்திற்கு நேரிடையாக சென்று அங்கு தான் தேர்வுக்கு மனுச் செய்துள்ளதாக எழுதிக்கொடுத்து தேர்வு எழுதியுள்ளார்கள், அவர்கள் தேர்வு மனு செய்து கொண்டதற்கான அத்தாட்சி கேட்டு அதற்கான சரியான தகவல்கள் அவர்களிடம் இருநது வரவில்லை.

(8) தங்களின் சான்றிதழ்களில் அதிகாரமற்ற முறையில் திருத்தங்கள் செய்துள்ளார்கள்.

1982 மார்ச் 24]

(9) 96 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் அனுப்பப்பட்டு இருக்கிறது. அவர்கள் மனுவில் குறிப்பிட்ட விலாசத்தில் இல்லை என்ற காரணத்தினால் அரசுத் தேர்வுகள் அலுவலகத்திற்கு சான்றிதழ்கள் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டன.

(10) 9 மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட தேர்வு கட்டணம் செலுத்த வில்லை. தேர்வுக் கட்டணம் செலுத்திய கருவூலச் சீட்டும் அனுப்பவில்லை.

இப்போது இருக்கின்ற அந்த ஒன்பது மாணவர்கள் ஒழுங் கீனச் செயல்களில் ஈடுபட்டதாலும் மதிப்பெண் சான்றிதழ்களில் அதிகாரப் பூர்வமற்ற முறையில் திருத்தங்கள் செய்துள்ளதாலும் அவர்கள் மீது கடுமையான முறையில் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தகவல் தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

திரு. ஏம். சின்னசாமி: தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளித் தேர்வானாலும் மற்ற தேர்வானாலும் தேர்வு முடிவு கள் தெரிவதற்கு சற்றுக் காலதாமதம் ஆகிறது. இந்தக் கால தாமதத்தைத் தவிர்க்கும் முறையிலே தேர்வு தேதி எப்படி அறிவிக்கப்படுகிறதோ அதைப்போன்று தேர்வு முடிவுகள் தேதி எப்போது வரும் என்பதையும் அறிவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அந்தப் பழக்கம் நாம் வைத்துக்கொள்ளவில்லை. இதற்கு முன் னாலே தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாட்களைவிட சென்ற ஆண்டு நாட்களை நாம் குறுக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு இன்னும் அதைக் கொஞ்சம் குறுக்குவதற்கு நாம் ஏற்பாடு செய்கிறோம். அனுபவத்தின் அடிப்படையில் காலதாமதத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை அரசு ஒவ்வொரு ஆண்டும் எடுத்து வருகிறது.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, தேர்வு நேரங்களிலே ஆசிரியர்கள் விடுப்பு—லீவு—போட்டுவிடுகிறார் கள். ஆகவே தேர்வு காலங்களிலே எந்தப் பணியாக இருந்தா லும் ஆசிரியர்கள் விடுப்புப் போடுவது தவிர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: லீவு எடுப்பது என் பது பல்வேறு காரணங்களுக்காக ஆசிரியர்கள் எடுக்கலாம். நாம் அனுமதி தந்துதான் தீரவேண்டும். ஆனால் நம்முடைய பரீட் சைகளை நடத்த முடியாத அளவுக்கு ஏதாவது எடுப்பார்களா னால் அதுபற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.